2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன், என்ன பிரச்சினை? சொல்லுங்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5, 6 பிரச்சினைகள் இருக்கின்றன. சத்தீஷ்கரில் இப்பொழுது கடத்தப்பட்டிருக்கின்ற தமிழகத்தைச் சேர்ந்த. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன், நீங்கள் காலையிலே தொலைக்காட்சியில் பார்த்தீர்களா, இல்லையா? மத்திய அரசு பேச்சுவார்த்தை நடத்தி, அது இப்பொழுது* progress-*இலே இருக்கிறது. அம்மா அவர்களும் மிகுந்த கவலையோடு கடிதம் அனுப்பியிருக்கிறார்கள்.* (குறுக்கீடு) *தயவுசெய்து உட்காருங்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *எதையும் மன்றத்தில் பேச அனுமதிக்கவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மன்றத்தில் பேச அனுமதிக்கவில்லை என்று நீங்கள் அந்த வார்த்தையைச் சொல்வது தவறு. நீங்கள் எவ்வளவோ பிரச்சினைகளை எழுப்பி, உங்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கின்றது.*

சில பிரச்சினைகள் குறித்து என்னுடைய அறையில் வந்து கொடுத்திருக்கிறீர்கள். அவை துறைகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. துறைகளிடமிருந்து பதில் வந்த பிறகுதான் நான் அவற்றை எடுத்துக்கொள்ள முடியும். துறையிலிருந்து பதில் வந்தவுடனே எடுத்துக்கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) *மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு, அவர் பேசுகின்ற சமயத்தில் நீங்கள் ஏன் நிற்கிறீர்கள்?* Please sit down.

முற்பகல் 11-05

திரு. அ. சவுந்தரராசன்: *கருத்துகளைச் சொல்வதற்கு எங்களுக்கு வாய்ப்புத் தாருங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் பேசக்கூடாது என்று நான் சொல்லவில்லை. நீங்கள் என்னுடைய அறைக்கு வந்து, சில பிரச்சினைகள் குறித்து என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதைச் சம்பந்தப்பட்ட துறைக்கு நான் அனுப்பியிருக்கிறேன். அது என்னுடைய ஆய்வில் உள்ளது. துறையிலிருந்து பதில் வந்தவுடன், நான் அதை எடுத்துக்கொள்கிறேன்.* Please sit down. *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பிரச்சினை எதுவும் எழுப்பவில்லை. நீங்கள் சொல்கிறமாதிரி, நாங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை உங்களிடம் கொடுக்கிறோம். அதுகுறித்து உங்களுடைய அறையிலே வந்து பேசுகிறோம். நீங்கள் அதை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்புகிறீர்கள். மாண்புமிகு புதிய அமைச்சர்கள் அனைவருமே கஷ்டமான கேள்விகளுக்குக்கூட நல்ல பதிலைச் சொல்கிறார்கள். துறை அதிகாரிகளும் அதற்கு நல்ல ஒத்துழைப்புக் கொடுக்கிறார்கள். ***

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவருக்குக் களங்கம் கற்பிக்கின்ற வகையிலே, உள்நோக்கத்தோடு மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார். அதிகாரிகள் செய்கிறார்கள், அமைச்சர்கள் செய்கிறார்கள், ** என்று சொல்வது, உள்நோக்கம் கற்பிப்பதாக இருக்கிறது. தயவுசெய்து அதுபோன்று இனிப் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினருக்கு என்மீது என்ன கோபம் என்று தெரியவில்லை.* Please sit down. *வாழ்க வசவாளர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் கடைசியில் பேசியது அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதிக்க முடியாது. நீங்கள் என்னை எதிர்த்துப் பேசுவது மரபு இல்லை. (குறுக்கீடு)* Please sit down. *(குறுக்கீடு)* ** Please sit down.

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2012 ஏப்ரல் 27]

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எழுப்புகிறபொழுது, அதற்கு பதில் தேவைப்படுகிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். எல்லோரும் இப்படி எழுந்து நின்றால் நான் என்ன செய்வது? உங்களுடைய கட்சியின் தலைவர் பேசட்டும். நீங்கள் எல்லோரும் எழுந்து நின்றால் எப்படி? (குறுக்கீடு) நீங்கள் இரண்டு பேர்களும் எழுந்து நின்று பேசுவது எப்படி முறையாகும்? (குறுக்கீடு) நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) உங்களுடைய கோரிக்கை என்னுடைய ஆய்விலே உள்ளது என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) அதை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) நீங்கள் கையை நீட்டிப் பேசுவது மரபு அல்ல; முறையும் அல்ல. (குறுக்கீடு) உங்களை நான் எச்சரிக்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், சபையை மிகவும் கண்ணியமான முறையில், அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் மதிப்பளித்து, (மேசையைத் தட்டும் ஒலி) மூலக் கேள்வி ஒருவர் கேட்டால், அனைத்துக் கட்சி பிரதிநிதிகளுக்கும், ஒரு கட்சியைச் சார்ந்த பல உறுப்பினர்களுக்கும் பல துணைக் கேள்விகளை எழுப்புவதற்கு அனுமதித்து, சபையை மிகவும் நல்ல முறையில் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பவிருக்கின்ற கவன ஈர்ப்புத் தீர்மானம், பொது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தால், அதைச் சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பி, அதற்குரிய பதிலைப் பெற்று உறுப்பினர்களுக்கு உரிய முறையில் தர வேண்டுமென்ற காரணத்தால், சில நேரங்களில் காலதாமதம் ஏற்படலாம். அதற்கு நியாயமான காரணங்கள் இருக்கும். ** நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை குறித்து நீங்கள் ஏதாவது எழுப்ப விரும்பினால், அது துறைக்கு அனுப்பப்பட்டு துறையிடமிருந்து பதில் வந்தவுடன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதனை உறுதியாக எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 ஏப்ரல் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம் உட்காருங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் உட்காருங்கள். நான் சில புள்ளிவிவரங்களைப் பற்றிச் சொல்ல வேண்டும். பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்க போதிய நேரம் ஒதுக்குவதில்லை என்றும், தங்களது கருத்துகளைச் சொல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை எனவும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். பேரவை விதி 108-ன்கீழ், பேரவையில் விவாதத்திற்கு வரும் எந்த ஒரு பொருள் குறித்தும் நடைபெறும் விவாதத்தில் உறுப்பினர்களுக்கு உரையாற்றுவதற்கான கால வரம்பைப் பேரவைத் தலைவர் நிர்ணயம் செய்யலாம் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில், நான் ஜனநாயகபூர்வமாக, அவையை நடத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு, விவாதத்தின்போதும், வினாக்கள்-விடைகள் நேரத்தின்போதும் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் உரிய வாய்ப்பினை அளித்து வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், இப்பேரவை தொடங்கியதிலிருந்து 20-4-2012 வரை மொத்தம் இதுவரையில் உறுப்பினர்கள் அவையில் எழுப்பிய 292 மூல வினாக்களுக்கு 972 துணை வினாக்களை அனுமதித்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்களுக்கு 18 மூல வினாக்களும், அதாவது 6.16 சதவிகிதமும், 101 துணை வினாக்களும், அதாவது 10.39 சதவிகிதமும் எழுப்ப வாய்ப்பளித்துள்ளேன்.

முற்பகல் 11-10

விவாதங்களைப் பொறுத்தமட்டில், 10 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சிக்கு மொத்த நேரத்தில் 13.72 சதவிகிதம் அளவுக்கு நேரம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இவர்களைவிட 15 மடங்கு உறுப்பினர் எண்ணிக்கையைக் கொண்ட ஆளும் கட்சிக்கு 28.21 சதவிகித நேரம் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. உறுப்பினர் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு விவாதத்தில் வாய்ப்பளிப்பது என்ற நடைமுறையை நான் பின்பற்றத் தொடங்கினால், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்களுக்கு மொத்த

நேரத்தில் 5 சதவிகிதத்திற்கும் குறைவான நேரத்தையே ஒதுக்கவேண்டியதிருக்கும். மாறாக, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஜனநாயக முறையில் பேரவையில் தங்களது கருத்துகளை சுதந்திரமாகத் தெரிவிப்பதற்கு ஏதுவாக, உறுப்பினர்களுக்குப் போதிய வாய்ப்புகள் அளிக்கப்பட்டு, பேசுவதற்குப் பெருந்தன்மையுடன் கூடுதல் நேரமும் அளிக்கப்பட்டு வந்துள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எண்ணிக்கை அடிப்படையில் பாராமல், ஜனநாயக முறைப்படியும், பேரவையில் இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வந்த மரபுகளின்படியும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்களுக்குத் தங்கள் கருத்துகளைத் தெரிவிப்பதற்கு அதிகமான நேரம் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு உறுப்பினர்கள், ஒரு நிமிடம், please sit down. *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்களுக்குத் தெரியும். 2006-2011 காலக்கட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களும் இங்கே இருக்கிறார்கள். நானும் அன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன். நான் ஏறக்குறைய 5,000 கேள்விகள் கேட்டிருந்தேன். ஆனால், நான் கேட்ட ஒரு கேள்வியைக்கூட அன்றைக்கு மூலக் கேள்வியாக எடுக்கவில்லை. அந்த 5,000 கேள்விகளையும் ஒட்டுமொத்தமாக* unstarred questions-*ஆக மாற்றிவிட்டார்கள். அப்படி உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட பிறகுகூட, அதை எனக்குப் புத்தகமாகக் கொடுக்கவில்லை. ஆனால், என்ன சொன்னார்கள்? அவை உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டுள்ளன என்று சொன்னார்களேயொழிய, நான் கேட்ட கேள்விகளுக்கான பதில்களைப் புத்தகமாகக்கூடக் கொடுக்கவில்லை. நான் 5,000 கேள்விகள் கேட்பதற்காகக் கொடுத்ததில், ஒரு கேள்வியைக்கூட மூலக் கேள்வியாக எடுத்துக்கொள்ளவில்லை.*

அந்த 5 ஆண்டுகளிலே நான் கேட்ட 5,000 கேள்விகள், மூலக் கேள்விகளாக அனுமதிக்கப்படவில்லை என்றாலும்கூட, ஒரு துணைக் கேள்வியையாவது அவர்கள் அனுமதித்தார்களா என்று சொன்னால், அந்த ஐந்தாண்டுகளில் கிட்டத்தட்ட 7 முறைதான் என்னை துணைக் கேள்வி கேட்க அனுமதித்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, நீங்களெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாக வந்ததற்கு உண்மையிலேயே கௌரவப்பட வேண்டும்; (மேசையைத் தட்டும் ஒலி) பெருமைப்பட வேண்டும்; நீங்கள் அனைவரும் கொடுத்து வைத்தவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் 10 வருடங்கள் அமைச்சராக இருந்தவன்; மாண்புமிகு அம்மா அவர்கள் எனக்கு கட்சியிலே முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். அப்படியிருந்த நிலையில், அன்றைக்கு, இந்தச் சட்டமன்றத்தில் என்னையே பின்னால் அமர வைத்து, அசிங்கப்படுத்தினார்கள்; அவமானப்படுத்தினார்கள். நாங்கள் எதிர்க்கட்சியிலே இருந்தவர்கள் எழுந்தாலே, அன்றைக்கு இருந்தவர்களெல்லாம் எங்களைப் பார்க்க மாட்டார்கள்.

ஆனால், இன்றைக்கு அதுபோன்ற நிலைமையா? தொலைக்காட்சிக்கு நீங்கள் பேட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள் ஒரு தொலைக்காட்சியில் அதுபோன்று சொல்கிறார். திரு. ப. டில்லி பாபு அவர்களுக்கு இன்றைக்கு நான் எத்தனை கேள்விகளுக்கு துணைக் கேள்விகள் கேட்க அனுமதித்திருக்கிறேன்? மனசாட்சியைத் தொட்டுப் பார்க்க வேண்டும். நாம் சொல்வது உண்மைக்கு மாறானதா; உண்மையைத்தான் சொல்கிறோமா என்று மனசாட்சியைத் தொட்டுச் சொல்ல வேண்டும். அதைவிடுத்துவிட்டு, தொலைக்காட்சியிலே வேறுவிதமாகப் பேட்டி கொடுக்கிறீர்கள். எனவே, உண்மைக்கு மாறான தகவலை தயவுசெய்து சொல்லவேண்டாம். அப்படி என்னைக் குறை கூற வேண்டுமென்றால், வெளியிலே கூறுங்கள். வாழ்க வசவாளர்கள்! (மேசையைத் தட்டும் ஒலி, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *யாராவது ஒருவர் எழுந்து கேள்வி கேளுங்கள். அனைவரும் எழுந்து நின்று இதுபோன்று பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) பின்னாலே பாருங்கள்; நீங்கள் எழுந்து நிற்கிறீர்கள்; திரு. டில்லி பாபு எழுந்து நிற்கிறார்; உங்களுடைய கட்சி உறுப்பினர்கள் எழுந்து நிற்கிறார்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: I am not allowing you. Please sit down. (Interruptions) Please sit down, I am not allowing you. *(குறுக்கீடுகள்) அது உங்களுடைய விருப்பம்.* Walk-out *செய்ய வேண்டுமென்பது உங்கள் விருப்பமாக இருந்தால், அதில் நான் என்ன செய்ய முடியும்.*